உபாகமம் 31:8

உங்களை நடத்துபவராகிய கர்த்தரே உன்னோடு இருப்பா ரல்லாதே அவர் உன்னை விடவும், கை நழுவவும் மாட்டாராகையால் நீ அஞ்சவும் கலங்கவும் வேண்டாம் என்றான்.

சங்கீதங்கள் 34:17-18

ஆண்டவரே! எப்போது இதைப் பார்ப்பீர்? என் ஆத்துமாவை அவர்கள் கொடுமையில் நின்றும், எனக்கு ஏகமாயிருக்கிற ஆத்துமத் தைச் சிங்கங்களாகிய அவர்களி னின்றும் விடுவியும். பெரிய சபையில் உம்மை ஸ்துதிப்பேன்; திரளான சனங்க ளிடத்து உம்மைக் கொண்டாடு வேன்.

சங்கீதங்கள் 30:5

உம்முடைய கையில் என் ஆத்துமத்தை ஒப்புக்கொடுக்கிறேன்; சர்வ சத்தியமுடைத்தான தேவனாகிய ஆண்டவரே! நீர் என்னை மீட்டுப் போட்டீர்.

அர்ச். மத்தேயு சுவிசேஷம் 5:4

சாந்த குணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்: ஏனெனில் அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக்கொள்வார்கள். (சங். 36:11.) ழ 4. பூமியைச் சுதந்தரித்துக்கொள்வார்கள்:- சாந்தகுணமுள்ளவர்கள் மோட்சத்தைச் சுதந்தரித்துக்கொள்வதுமன்றி, இவ்வுலகத்திலும் எதிரிகளும் வழக்குகளுமில்லாமல் அமரிக்கையாய் வாழ்வார்களாமே.

இராயப்பர் பொது நிருபம் 1 5:7

அவர் உங்களை விசாரிக்கிறவராகையால், அவர்மேல் உங்கள் சகல கவலைகளையும் வைத்துவிடுங்கள். (சங். 54:24; மத். 6:25; லூக். 12:22.)

சங்கீதங்கள் 38:9

ஆனால் தேவரீரே இதைச் செய்த படியால் நான் வாய் திறவாமல் மவுனமாயிருந்தேன், உமது தண்டனை களிலே நின்று என்னை அகற்றியருளும்.

காட்சியாகமம் 21:3-4

அப்போது சிங்காசனத்திலிருந்து ஒரு பெரிய குரல் சத்தம் உண்டாகி: இதோ, மனிதரோடு சர்வேசுரன் வசிக்கும் ஸ்தலம். அவர்களோடு அவர் வாசம்பண்ணுவார்; அவர்களும் அவ ருடைய ஷஜனங்களாயிருப்பார்கள். சர்வே சுரன்தாமே அவர்களுடைய தெய்வ மாக அவர்களோடேகூட இருப்பார். சர்வேசுரன் அவர்களுடைய கண் களினின்று கண்ணீர் யாவையும் துடைப் பார்; இனி மரணமே இராது: இனி துக்கமும், அழுகைச் சத்தமும் துயரமும் கிடையாது. முந்தினவைகள் ஒழிந்து போயின என்று உரைக்கக்கேட்டேன். (காட்சி. 7:17; இசை. 25:8.)

உரோமாபுரியார் 1 12:15

மகிழ்வாரோடு மகிழ்ந்து, அழுவாரோடு அழுங்கள்.

யோவேல் ஆகமம் 2:12

ஆதலால் இப்போது அழுகை யாலும், பிரலாபத்தாலும் உங்கள் முழு இருதயத்தோடு நம்மிடந் திரும்பி வாருங்கள் என்கிறார் ஆண்டவர்.

சங்கப் பிரசங்கியாகமம் 1:18

ஏனெனில் அதிக ஞானத்தில் அதிக சலிப்புண்டாம்; படிக்கப் படிக்கப் கஷ்டமும் அதிகரிக்கும்.

யோபாகமம் 1:20-21

அப்பொழுது யோபு எழுந் திருந்து தன் ஆடைகளைக் கிழித்துத் தலை மயிரைச் சிரைத்துத் தரையில் விழுந்து (கடவுளைத்) தொழுது: நிர்வாணியாய் என் தாயின் கர்ப்பத்திலிருந்து வெளிப்பட்டேன், நிர்வாணியாய் அவ்விடத்திற்குத் திரும்புவேன். கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார். தேவனுக்கு எப்படி இஷ்டமோ, அப்படியே ஆயிற்று. ஆண்டவரின் நாமத்திற்குத் தோத்திர முண்டாகக் கடவது என்றான். (சர்வப்.5:14; 1 திமோ.6:7.)

காட்சியாகமம் 7:16-17

இவர்களுக்கு இனிப் பசியும் இல்லை, தாகமும் இல்லை; வெயிலா வது உஷ்ணமாவது இவர்கள்மேல் படுவதுமில்லை. (இசை. 49:10.) ஏனெனில் சிங்காசனத்தின் மத்தி யிலிருக்கிற செம்மறிப்புருவையான வரே இவர்களை மேய்த்து, இவர்களை ஷஜீவஷஜல ஊற்றுகளுக்கு கூட்டிக்கொண்டு போவார். சர்வேசுரன் தாமே இவர்களுடைய கண்களினின்று கண்ணீ ரெல்லாம் துடைப்பார் என்றார். (இசை. 25:8; காட்சி. 21:4.)

அரசராகமம் 4 20:5

நீ திரும்பிப் போய் என் பிரசை யின் தலைவனான எசேக்கியாசை நோக்கி: உன் பிதாவான தாவீதின்

தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறது என்னவெனில்: உன் செபத்தைக் கேட்டோம்; (நீ சிந்திய) கண்ணீரை யுங் கண்டோம்; இதோ உன்னைச் சொஸ்தமாக்கினோம், நீ மூன்று தினத்தில் ஆண்டவருடைய தேவால யத்திற்குப் போவாய்;

சங்கப் பிரசங்கியாகமம் 11:10

உன் இருதயத்தினின்று கோபத் தையும், உன் உடலினின்று கெட் டவை யாவையும் நீ விலக்கக்கட வாய்; ஏனெனில், யௌவனமும் வியர்த்தம், சிற்றின்பமும் வியர்த் தமே.

பழமொழியாகமம் 10:1

ஞானமுள்ள புதல்வன் தன் பிதாவைச் சந்தோஷப்படுத்து கிறான்; ஆனால் மதிகெட்ட மகன் தன் மாதாவுக்குக் கஸ்தியை வருவிக் கிறான்.